# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.60/2021

DW3–சிங்காரவேலு நாள்:22.09.2025

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

தாவா சொத்துக்கள் வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதிகளின் தகப்பனார் சரவணனுக்கு 18.10.2007 பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் 05.08.2019ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் பெற்ற சிகிச்சைக்காக வாங்கிய கடனுக்காவும் மற்றும் குடும்ப செலவுக்காக வாங்கிய கடனுக்கு ஆதரவாகவும் தாவா சொத்தை பொறுத்து கிரய பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கடன் கொடுக்கும்போது கிரயபத்திரம் எழுதிகொடுக்கவேண்டுமென்று நான் சொன்னதால் வாதிகளின் குடும்ப சூழ்நிலை காரணமாக கிரயபத்திரம் 27.07.2021ம் தேதி எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் 1, 2 பிரதிவாதிகள் அனுபவம் வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரயம் வாங்கியவுடன் நான் என்பெயருக்கு பட்டா மாற்றிவிட்டேன். கடனுக்கு ஆதரவாக எழுதிகொடுக்கப்பட்ட கிரய பத்திரத்தின் அடிப்படையில் என்செல்வாக்கை பயன்படுத்தி நான் பட்டா மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. 16.07.2020ம் தேதி பாப்பாத்தியிடம் கடன் வாங்கியதற்கு ஆதரவாக 1, 2 பிரதிவாதிகள் கிரய பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றும், அதன்பின்னிட்டு என்னிடம் வாங்கிய பணத்தை வைத்து அந்த சொத்தை மீட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இளவர் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது மரவள்ளி கிழங்கு பயிர் செய்துள்ளேன். நான் தாவா சொத்தில் பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கு தாக்கல் செய்தபின்னர் நான் என்பெயருக்கு பட்டா, சிட்டா மற்றும் ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணத்தை

கொடுத்தால் தாவா சொத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக நான் ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கு ஆதரவாக நான் கொடுத்த பணத்தை 1, 2 பிரதிவாதிகள் செலுத்த தயராக உள்ளார்கள் என்றால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்கிறேன். நான் ரூ.6லட்சத்திற்கு தாவாசொத்தை கிரயம் வாங்கினேன். அந்த பணத்தை நான் வங்கி வரவோலை மூலம் கொடுத்தேன். பூர்விக சொத்தை விற்று மேற்படி இடத்தை வாங்கினேன். பூர்விக சொத்தை விற்றதற்காக ஆதாரம் உள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை நான் 27.07.2021 ம் தேதி வாங்கினேன். கிரய பத்திரத்தில் ரொக்கமாக பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், வங்கி கேட்பு வரவோலை மூலம் பணம் கொடுத்தது தான் சரியாகும். இந்த விவரத்தை நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன். கிரயபத்திரத்தின் 27ம் தேதி கையெழுத்து வாங்கப்பட்டது. தாவா சொத்து பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியும் என்றால் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்து. அந்த சொத்தில் உரிமையுள்ள 2 இளவர்கள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியும். இளவர்கள் பெயரில் நான் ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. வங்கியில் பணம் வைப்பீடு செய்யவில்லை. தாவா சொத்தை நான் அனுபவம் செய்வதற்கு வருவாய் துறையினர் அனுபவசான்று வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை. நான் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். நான் அனுபவசான்று தாக்கல் செய்துள்ளேன் என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் அடங்கல் தான் தாக்கல் செய்துள்ளேன். பட்டா, வரிரசீது என்பெயரில் மாறிவிட்டது. மின்இணைப்பு சரவணக்குமார் பெயரில் உள்ளது. மின்இணைப்புக்கு பெயர் மாற்றம் செய்ய நான் மனு செய்துள்ளேன். அந்த மனுநகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மின்மோட்டார் 7.5 HP பவர் ஆகும். அது மின்மோட்டார் கம்பெனி பெயர் தெரியாது. தாவா சொத்தில் தற்போது வேம்பு மரங்கள் உள்ளது.

அதில் 3ஏக்கரில் மரவள்ளி கிழங்கு உள்ளது. மீதி இடம் காலியாக உள்ளது. தாவா சொத்தை கிழக்கு பக்கம் 3 பகுதியாகவும், மேற்கு பக்கம் 3 பகுதியாகவும் பிரித்துள்ளேன். மொத்தம் 8 வயலாக உள்ளது. தாவா சொத்துக்கள் என்அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் அனுபவம் செய்துவந்தால் மின்மோட்டாரின் கம்பெனி பெயர் மற்றும் ஹார்ஸ் பவர் மற்றும் மொத்தம் எத்தனை வயல்களாக உள்ளது என்று சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று 3ஏக்கரில் மரவள்ளி கிழங்கு பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாப்பாத்திஅம்மாளுக்கும் அவருக்கு கிரயம் கொடுத்தவருக்கு இடையே என்ன வரவு செலவு இருந்தது, என்ன பணம் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பாப்பாத்திஅம்மாளுக்கு நிலத்தை கிரயம் கொடுக்கவில்லை என்றும், கடனுக்கு ஆதரவாக எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாப்பாத்தி அம்மாளிடம் கடன் பெற்றுக்கொண்டு கிரயம் பத்திரம் எழுதிகொடுத்துவிட்டு, ஒரே வருடத்தில் மீண்டும் பணத்தை செலுத்தி கிரயம் திரும்ப வாங்கியது போன்று தான் என்னிடமும் கடன் பெற்று அதற்கு ஆதரவாக தான் கிரய பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் நான் கிரயம் வாங்கியிருந்தால் இளவர்களுக்கு என்று குறிப்பிட்ட தொகையை ஏற்பாடு செய்திருப்பேன் என்றும், அவ்வாறு கிரயம் வாங்காததால் தான் ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கடன் கேட்கும்போது கிரய பத்திரம் எழுதிகொடுத்தால் தான் கடன்கொடுப்பேன் என்று சொல்லி 26ம் தேதி நான் ரொக்கம் கொடுத்தாக பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வட்டிக்காக தான் பணம் கொடுத்தேன் என்றும், கிரயமாக வாங்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் அதை அடைவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நடைமுறையில் கடனுக்கு ஆதரவாக கிரயம் பத்திரம் எழுதிவாங்குவது போன்ற அடிப்படையில் தான் என்பெயருக்கு கடனுக்கு ஆதரவாக கிரய பத்திரம்

எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் வாங்கி பணத்தை செலுத்த தயராக இருக்கிறார்கள் என்றும், நான் அதை பெற்றுக்கொண்டு கிரய பத்திரம் எழுதிகொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.